***இலண்டன் தமிழ் நிலையம் - திருக்குறள் போட்டி 2021***

உ பிரிவு

| | | |
|---|---|---|
| உ பிரிவு | ஆண்டு 6, ஆண்டு 7 | Year 6 / Year 7 |

**ஏதேனும் மூன்று கேள்விகளுக்கு விடை கூற வேண்டும். அத்துடன் ஏதேனும் ஒரு குறளுக்குப் பொருள் கூற வேண்டும்.**

1. ***திருக்குறளை எழுதியவர் யார்?***
   *திருவள்ளுவர்*
2. ***திருக்குறளின் இன்னொரு பெயர் என்ன?***
   *தெய்வ நூல்*
3. ***திருவள்ளுவர் எந்த நாட்டில் வாழ்ந்தார்?***
   *இந்தியா*
4. ***திருக்குறளில் எத்தனை குறட்பாக்கள் உண்டு?***
   *ஆயிரத்து முன்னூற்று முப்பது குறட்பாக்கள் (1330 குறட்பாக்கள்)*
5. ***திருக்குறளின் முப்பால்கள் எவை?***
   *அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால்*

***தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்பிற்பின்***

***என்குற்றம் ஆகும் இறைக்கு (குறள் 436)***

முதலில் தன் குற்றத்தைக் கண்டு விலக்கிப் பிறகு அடுத்தவர் குற்றத்தைக் காணும் ஆற்றல் மிக்க அரசிற்குக் குற்றம் ஏதும் வராது. What fault will remain in the king who has put away his own evils and looks after the evils of others.

***காலம் கருதி இருப்பர் கலங்காது***

***ஞாலம் கருதுபவர் (குறள் 485)***

கலக்கத்துக்கு இடம் தராமல் உரிய காலத்தை எதிர்பார்த்துப் பொறுமையாக இருப்பவர்கள் இந்த உலகத்தையேகூட வென்று காட்டுவார்கள். They who thoughtfully consider and wait for the (right) time (for action), may successfully meditate (the conquest of) the world.

*வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்*

*உள்ளத்து அனையது உயர்வு (குறள் 595)*

நீர்ப்பூக்களின் அடிக்காம்பின் நீளம் நீரின் அளவே. அது போல மக்களின் உயர்வும் அவர்களின் மன ஊக்கத்தின் அளவே. The stalks of water-flowers are proportionate to the depth of water; so is men's greatness proportionate to their minds

*பணியுமாம் என்றும் பெருமை; சிறுமை*

*அணியுமாம் தன்னை வியந்து (குறள் 978)*

பெருமை உடையவர் செருக்கு இல்லாமல் பணிவுடன் இருப்பர்; சிறுமை உடையவரோ செருக்குடன் தம்மைத் தாமே வியந்து பாராட்டுவர். The great will always humble himself; but the mean will exalt himself in self-admiration.

*ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு*

*ஆழி எனப்படுவார் (குறள் 989)*

சான்றாண்மை எனப்படும் கடலுக்குக் கரை எனப்படும் சான்றோர், காலம் மாறினாலும் தாம் மாறமாட்டார். Those who are said to be the shore of the sea of perfection will never change, though ages may change.